
# பேச்சுப்போட்டி

## காமராசர்



அனைவருக்கும் வணக்கம் இவ்வுலகில் அழிவில்லாச் செல்வம் என்றால், அது கல்விச் செல்வம் தான் அத்தகைய செல்வத்தை இலவசமாக கொடுத்த, படிக்காத மேதையான காமராசரைப் பற்றி நான் இங்கு பேசவந்துள்ளேன்.

தென்தமிழ் நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில், தந்தை குமாரசாமி, தாயார் சிவகாமி அம்மாள் ஆகியோருக்கு மகனாக 1903 ஆம் ஆண்டு சூலை 15 ஆம் தேதி பிறந்தார் காமராசர்.

சிறு வயதிலேயே தந்தையைப் பறிகொடுத்த காமராசர், பள்ளி படிப்பை தொடர முடியாமல் வறுமையில் வேலைக்கு சென்றார்.

Notebook writer

"கருப்புக் காந்தி" என்று வட மாநில மக்களால் பாராட்டப்பட்ட ஒரே தமிழ்த் தலைவர் காமராசர் ஆவர், "பாம்பின் கால் பாம்பு அறியும்", என்பார்கள். ஏழையாகப் பிறந்த அவர் ஏழைகளின் துயரைத் துடைப்பதையே தம் குறிக்கோளாகக் கொண்டார்.

சின்னஞ் சிறு வயது முதலே தன்னை காங்கிரசுப் பேரியக்கத்தில் இணைத்துக் கொண்டார். தம் இடைவிடா உழைப்பால் தமிழக காங்கிரசுத் தலைவராகவும், அகில இந்திய காங்கிரசுத் தலைவராகவும் விளங்கினார். தமிழகத்தின் ஒப்புயர்வற்ற முதலமைச்சரானார். மீண்டும் மீண்டும், காமராசர் ஆட்சி வேண்டும் என்று மக்கள் ஆசைப்பட்டார்கள்

"படிக்காத மேதைகளும் பாரினிலுண்டு", என்பர். கட்டுப்பட்ட பட்டப்படிப்பை காமராசர் பெறாவிட்டாலும், உலகமாம் பல்கலைக் கழகத்தில் அவர் கற்ற கல்வி ஏராளம். காமராசர் செய்த கல்வித் தொண்டு கணக்கிலடங்காதது.அவர் பட்டி தொட்டி எல்லாம் பள்ளிக் கூடம் ஏற்படுத்தினார். உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி வழங்கினார். ஏழை மாணவர்களுக்கு இலவச உணவு, உடை, புத்தகம் வழங்கினார். சுருக்கமாகச் சொன்னால் காமராசர் 'கல்விக் கண்ணைத் திறந்து வைத்தார்', எனலாம்.அவர் இலஞ்சம் பெறாத முதல்வர். திறமைக்கு மதிப்பளித்துப் பணி கொடுத்தவர்.

சாகும் தருவாயில் அவர் வங்கிக் கணக்கில் மூவாயிரம் ரூபாய் மட்டுமே இருந்தது என்றால் அவர் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு நேர்மையைக் கடைப்பிடித்தார் என்பதை நன்கு அறியலாம்.

அவரது கரிய தோற்றமும், நெடிய உருவமும்,பெரிய கதர்ச் சட்டையும், பார்ப்பவர் இதயம் கவர்னவாகும். "உண்மைத் தமிழர் இவரே", என்று பெரியாரால் போற்றிப் பாராட்டப் பெற்ற வீரர் காமராசர். யாருக்கு அஞ்சாதவர். நேருவின் கொள்கையை ஏற்று அடுத்த தலைமுறை இளைஞர்களிடமே என்று தான் வகித்த அகில இந்திய காங்கிரசு தலைவர் பதவியை விட்டு விலகினார்.

கல்விக்கண் திறந்தவர், கர்மவீரர், கருப்புக் காந்தி, படிக்காத மேதை, பெருந்தலைவர் ஏழை பாங்காளர், தன்னலமற்ற தொண்டர், கிங் மேக்கர் என்றெல்லாம் புகழ்ப்பெற்ற காமராசர் 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் மறைந்தார்.

அரசியல்வாதி எப்படி வாழ வேண்டும் என்பதற்கு முன் மாதிரியாக வாழ்ந்து மறைந்தவர் நம் காமராசர். காமராசர் தொண்டும், தியாக வாழ்வும் நமக்கு படிப்பினையாக அமையும். "கல்விக்குத் தந்தை", என்று போற்றப்படும் காமராசர் பிறந்தநாளை நாம் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுகிறோம்.

**நன்றி**

Notebook writer
Notebook writer